**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

CC.No.187/2024 தேதி 16.03.2026

PW2 – திரு. செல்லதுரை, 56/2026 , த/பெ. முத்துராசு

**(எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் குவிமுச பிரிவு 311 ன் கீழ் சாட்சியை திரும்ப அழைக்க மனுதாக்கல் செய்து அது Crmp 5252/2025 தேதி 08.01.2026 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.)**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன், Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

20.09.2015 மாலை 03.00 மணிக்கு சண்டை நடந்தது. போலிஸாரிடம் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, மருத்துவமனையில் வந்து விசாரித்ததார்கள். எனக்கு ஏற்ப்பட்ட காயத்திற்கு போலிஸார் புகார் வாக்குமுலம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். போலிஸாரிடம் சம்பவத்தில் எத்தனை நபர்கள் ஈடுபட்டதாக சொன்னேன் என்றால் 6 நபர்கள். எனக்கு எங்கு காயம் ஏற்ப்பட்டது என்றால் வலது கை மணிக்கட்டு. சுதாகருக்கு இடது கை மணிக்கட்டு. இரண்டு பேருக்கும் இரத்தக்காயம் ஏற்ப்பட்டது என்றால் சரிதான். எங்களுடைய ஆடைகளில் இரத்தக்கறை ஏற்ப்பட்டது என்றால் சரிதான். அந்த இரத்தக்கறைகளை போலிஸார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். சுதாகரின் ஆடைகளில் உள்ள இரத்தகறைகளை போலிஸார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். போலிஸார் ஆடைகளை வாங்கிச்சென்றார்களா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடந்தது யார்யாருக்கு தெரியும் என்றால் தேவேந்திரன், சுப்பையா அக்கம்பக்கத்திலிருந்த வீட்டினர் மற்றும் அனைவருக்கும் தெரியும். போலிஸார் மேற்படி நபர்களை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனக்கு ஏற்ப்பட்ட காயம் எப்படி ஏற்ப்பட்டதென்றால் பாலமுருகன் கட்டையால் அடித்ததில். கட்டை எங்கிருந்து வந்தது என்றால் தெரியாது, நாங்கள் வீட்டிற்குள் இருந்து சண்டை நடக்கவும் வெளியில் வந்தோம். கட்டை, கம்பிகளை எதிரிகள் எடுத்துச்சென்றுவிட்டனர். அன்று காலை நடந்த விநாயகர் ஊர்வலத்தில் விரோதம் ஏற்ப்பட்டது என்றால் சரிதான்.

பாதுகாப்பிற்கு 2 போலிஸார் வந்திருந்தார்கள். விநாயகர் ஊர்வலத்தில் 3 வது எதிரி வீட்டின் முன்பு வெடி வெடித்தோமா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு ஊர்வலம் துவங்கியது என்றால் சுமார் 11.00 மணி. 3 வது எதிரி வீட்டின் முன்பு சென்றபோது சுமார் 12.30 மணி. அங்கு வந்த சிறுவர்களை பாலமுருகன், நடராஜன் மறித்து அடித்தனர். போலிஸாரிடம் அந்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவரிடம் எனக்கு காயம் தொடர்பாக எதனால் ஏற்ப்பட்டது என்ற விபரத்தை நான்

கூறியுள்ளேன். மருத்துவர் எனக்கு ஏற்ப்பட்ட இரத்தகாயத்தை பார்த்தார் என்றால் சரிதான். மருத்துவரிடம் கட்டையால் அடித்ததால் காயம் ஏற்ப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாக்குமுலம் பெற்ற பிறகு போலிஸார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. 20.09.2015 மதியம் 02.30 மணிக்கு 3 வது எதிரியின் மகன் ரெங்கராஜ் என்பவரை நான், சுதாகர், சரவணன், தேவேந்திரன், சுப்பையா தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக வாட்டாத்திக்கோட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 196/2015 புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவுபெற்று நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் அடித்து எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் நாங்கள் தான் 3 வது எதிரியின் மகனை அடித்தோம் என்றாலும் எதிரிகள் கெட்ட வார்த்தையால் பேச வில்லை, அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. குற்ற எண் 196/2015 வழக்கிலிருந்து தப்பிபதற்காக பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

**ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,**
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.